Shalom

ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 6 இதழ் : 5 மார்ச் 2010



# நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்

மத்தேயு 26:41

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்




## சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. ஹவ்சிங் சங்காடா

குஜராத்

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். என்னுடைய பெயர் ஹவ்சிங் சங்காடா. நான் குஜராத் மாநிலத்தில் உள்ள தாகோத் மாவட்டத்திலுள்ள பாரேவா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாமல், பாவம் என்றால் என்ன என்று அறியாமல் அனைத்து விதமான பாவங்களையும் செய்துவந்தேன். எனது வாழ்க்கை சமாதானமிழந்து காணப்பட்டது.

இந்த நிலையில் எனது சித்தப்பா நூர்ஜிபாய் அடிக்கடி வியாதிப்பட்டு புத்தி சரியில்லாமல் ஆகிவிடுவார். மற்ற நேரங்களில் ஒரு போக்கிரியைப் போல அனைவரையும் அடிக்கவும், பஸ். ஜீப் போன்றவற்றினை நிறுத்தி கலாட்டா செய்வார். சிறிது நாட்கள் கழித்து அவர் நிரந்தரமாக நோயினால் பாதிக்கப்பட்டவரானார். மேலும் மனநிலை முற்றிலும் சரியில்லாமல் போனது. அவரை அநேக மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்று பூஜை மற்றும் மந்திர காரியங்கள் செய்தும் பலனில்லை. மேலும் மருத்துவர்களிடம் காண்பித்தும் குணமாகவில்லை. பின்பு வீட்டில் பூஜைக்குரிய விஷயங்களை ஏற்படுத்தி வீட்டிலேயே பூஜித்து வந்தோம், அப்படியும் பலனில்லை. இறுதியாக மதராசிலிருந்து (தென்னிந்தியா) தேவதாஸ் என்ற மிஷனெரி சகோதரர் வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரிடம் ஜெபிக்கும்படி எனது சித்தப்பாவை கூட்டிச் சென்றோம். என்ன அற்புதம் ஜெபித்தபோது தேவன் உடனடியாக சுகத்தைக் கொடுத்தார். மேலும் மனநிலையும் சரியானது.

இவ்வளவு பெரிய வியாதியிலிருந்து இலவசமாக விடுதலைக் கொடுக்கிறாரென்றால் அவர்தான் மெய்யான கடவுள் என்று உணர்ந்து எனது சித்தப்பா தேவனண்டை திரும்பி விசுவாசியானார். பின்பு தேவனுக்கென்று அர்ப்பணித்து ஊழியம் செய்ய ஆரம்பித்தார். அவரது வாழ்க்கையைப் பார்க்க எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. சாந்தமுள்ளவராய் அன்புமிக்கவராய் இவரை இயேசு கடவுள் மாற்றினாரென்றால் அந்த தெய்வம் எனக்கும் வேண்டும் என்று விரும்பினேன். பின்பு நானும் கிறிஸ்துவின் கூட்டங்களில் பங்கு பெற்றேன். என் பாவங்களை அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டேன். அதன்பின் ஷாலோம் குறுகிய கால வேதாகம பள்ளியில் இணைந்து பயிற்சி பெற்று வேத அறிவை பெற்று ஊழியத்திற்கு அர்ப்பணித்தேன். 1997ம் ஆண்டு நாலுமாவடி, திறப்பின் வாசல் ஜெபத்தில் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டேன். அன்று முதல் நாங்கள் குடும்பமாக எங்கள் கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறோம். நாங்கள் செய்து வரும் ஊழியங்களுக்காகவும், எனது மனைவி வனிதா மற்றும் பிள்ளைகள் ஜோசுவா, ஜாய்ஸ் ஆகியோருக்காக ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Mrs. Shanthi Manoharan ,** Sivakasi.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள். உங்களுடன் இந்த மார்ச் மாத இதழின் மூலமாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 23.02.2010 அன்று என் வாழ்க்கைப் பாதையில் 50 வருடங்களை நிறைவு செய்து புதிய வருடத்தை தேவன் காணச் செய்த கிருபைக்காக தேவனைத் துதிக்கிறேன். பிறந்த நாளுக்காக ஜெபித்த, வாழ்த்து கூறின உங்கள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக! மேலும் எனது மனமார்ந்த நன்றியை கூறுகின்றேன்.

பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற ஊழியர் கூடுகை, ஐந்து பெண்கள் முகாம்கள், மாணவர்களுக்கான பிரார்த்தனை கூடுகை, மற்றும் B.Th., தேர்வுகள் அனைத்தையும் தேவன் தாமே ஆசீர்வதித்துக் கொடுத்தார். குறிப்பாக புதிய சுதேச ஊழியர்கள் 40 பேர்களை நேர்முகத்தேர்வு செய்து மூன்று நாட்கள் விசேஷித்த முகாம் நடத்தி தெரிந்தெடுக்க கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

மார்ச் மாதத்திலும் நடைபெறவுள்ள ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, மற்றும் 1 மாத புதிய ஊழியர்களுக்கான சிறப்புப் பயிற்சி போன்ற ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். மேலும் கோவையைச் சேர்ந்த Pr. ரெயின்ஹார்டு சந்திரசேகர், மற்றும் டெல்லியிலிருந்து Mizorom Christian Fellowship குழு ஆகியோர் பணித்தள விஜயம் செய்ய உள்ளார்கள். இந்த பணித்தள விஜயம் ஆசீர்வாதமாக அமையவும், தேவனுடைய நாமம் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

மேலும் விரைவில் Shalom Bible Seminary ஆரம்பிக்கப்படவும், ஹிந்தி மற்றும் குஜராத்தியில் எழுத, படிக்கத் தெரிந்த நமது மூப்பர்கள், விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு பத்திரிக்கை வெளியிடவும், அதன் மூலம் விசுவாசிகள் மற்றும் மூப்பர்களை தேவன் பெலப்படுத்த ஜெபியுங்கள். அதுபோல டி.வி. மூலமாக ஷாலோம் பணிகளையும், மிஷனெரி சவால் செய்திகளையும், ஊழியங்களையும் பகிர்ந்து கொள்ள ஜெபித்து வருகிறோம். அதிகமான நாட்களை பணித்தளத்தில் செலவிட இருப்பதால் டி.வி. மூலமாக மிஷனெரி பணிகளை விரைவுபடுத்தவும், ஊழியங்களை ஜெபித்துத் தாங்குவோர், ஆசீர்வதிக்கப்படவும், ஊழிய வளர்ச்சிகளை தேவனுடைய மகிமைக்காக அறிவிக்கவும், புதிய ஜெப ஆதரவாளர்களைப் பெற்றுக்கொள்ளவும், பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலுக்காகவும் ஜெபியுங்கள்.

அதுபோல பணித்தளத்தில் பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் நானும், வஹிதாவும் செய்திகள் மற்றும் பாடல்களை ஆடியோ மற்றும் வீடியோ வாயிலாக பணித்தளத்தில் உள்ள கிராமங்களுக்கு அனுப்ப தீர்மானித்துள்ளோம். நமது 520 கிராமங்களிலுள்ள சபை மூப்பர்கள்,

விசுவாசிகளை சந்திக்க முடியாவிட்டாலும் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும், ஆவிக்குரிய சத்தியங்களையும், பாடல்களையும், அவர்கள் மொழியில் கேட்க, பார்க்க இது உதவியாயிருக்கும். இதற்காக நல்ல வீடியோ கேமராக்கள் மற்றும் ஆடியோ உபகரணங்கள் வாங்குவதற்கு 2 லட்சங்கள் தேவைப்படுகின்றன. இந்த தேவைகள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள். மேலும் பணித்தளத்தில் நடைபெறும் 40 நாள் உபவாச ஜெபம் பீல் மக்கள் இரட்சிக்கப்படவும் தேசத்திற்கு ஆசீர்வாதமாக அமையவும் ஜெபியுங்கள். மார்ச் 7ம் தேதி ஷாலோம் ஊழிய வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற சென்னையில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்காக சிறப்பான கூடுகை மற்றும் சென்னையில் கிளை அலுவலகம் ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள். 2020க்குள் முழு பீல் மக்கள் இரட்சிக்கப்பட இன்னும் பல சபைகள், ஸ்தாபனங்கள், தேவ பிள்ளைகள் ஜெபிக்க, ஆதரிக்க, பிரதிநிதிகளாய் செயல்பட முன்வர ஜெபியுங்கள். நீங்களும் குறைந்தது இரண்டு பேரையாவது நம் ஷாலோம் ஊழியத்திற்கு அறிமுகப்படுத்துங்கள்.

இந்த நாட்களில் தேர்வு எழுதவிருக்கும் நம்முடைய பிள்ளைகள் யாவருக்காவும் தவறாது ஜெபித்து வருகிறோம். நம் பீல் ஆதிவாசி மாணவர்கள் சிறப்பாக தேர்வுகள் எழுத ஜெபியுங்கள். மேலும் எங்கள் பிள்ளைகள் Titus (MBA I year), Shalom (B.Tech, II year) Shekinah (+2) ஆகியோரின் படிப்பிற்காகவும், சுக பெலனுக்காவும், தேவ பிள்ளைகளாக வளரவும் ஜெபியுங்கள்.

15.03.2010 அன்று எனது மனைவி வஹிதா தன்னுடைய 47வது பிறந்த நாளைக் காண்கிறாள். அவளுக்காக ஜெபியுங்கள், ஆசீர்வதியுங்கள். மேலும் தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபியுங்கள். (அவர்களது தொலை பேசி எண் : 09327445468) தேவ கிருபை உங்கள் அனைவரையும் தாங்குவதாக.

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## ஷாலோம் கிளை அலுவலகங்கள்

| | |
|---|---|
| **அன்பு பகிர்வு இயக்கம்**<br>16-F1 M.R.J. அப்பார்ட்மெண்ட்,<br>ஆண்டவர் நகர் 5வது தெரு<br>கோடம்பாக்கம், சென்னை – 600–024<br>செல் : 093444–75468 & 90427 – 80315 | **சகோ. G. செல்வதுரை,**<br>**M.T.N.** பில்டிங்,<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, மார்த்தாண்டம்<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>செல் : 094876–89869 |

# "ஜெபமே ஜெயம்"

சிறப்புச் செய்தி : **வஹிதா தேவதாஸ்**



"ஜெபமே ஜெயம்! ஜெபம் மனிதனுடைய வாழ்க்கையை மறுரூபமாக்குகிறது! ஜெபம் தேசத்தை அசைக்கிறது! ஜெபம் தேசத்திற்கு ஷேமத்தை கொண்டு வருகிறது".

சுமார் 16 வருடங்களுக்கு முன்பாக பாஸ்டர். பால் யாங்கிசோ, கொரியா தேசத்தை சேர்ந்தவர்கள் 10 இலட்சம் அங்கத்தினர்களை கொண்ட சபையை உருவாக்கினவர்கள், கொரிய தேச எழுப்புதலில் பெரிய பங்கை பெற்றவர்கள் சென்னை பட்டினம் வந்து. தமிழ்நாட்டில் உள்ள பாஸ்டர்களுக்கென்று விசேஷ கருத்தரங்கு நடத்தினார்கள். இந்த கருத்தரங்கில் குடும்பமாக பங்கு பெற்றோம். அப்பொழுது அவர்கள் கூறிய காரியம், கொரியா தேசத்தின் எழுப்புதலுக்கு காரணம் என்னவென்று அறிய வாஞ்சையோடு இருக்கிறீர்கள் அல்லவா? என்னுடைய பதில் ஒன்றே ஒன்றுதான். அது ஜெபம், ஜெபம் தான் கொரியாவில் எழுப்புதலை கொண்டு வந்தது என்று பிரசிங்கித்தார்கள். மறுநாளில் என்ன செய்தி கொடுப்பார்கள் என்று ஆவலோடு காத்திருந்தவர்களுக்கு அவர்கள் கொடுத்த செய்தி ஜெபம் தான். மூன்றாவது நாளில் ஜெபத்தை குறித்தே பேசி கருத்தரங்கு முடிவு பெற்றது. அந்த கருத்தரங்கில் ஜெபத்தை குறித்த காரியத்தில் என்னை தொட்ட காரியம் என்னவென்றால், கொரியாவில் உள்ள பாஸ்டர் பால்யாங்கி சோ அவர்கள் சபையில் உள்ள சாதாரணமான விசுவாசிகளும் சிறுகுழந்தைகளும் தினமும் ஒரு மணி நேரம் ஜெபிப்பார்களாம். மட்டுமல்லாமல், அவர்கள் சபையில் உள்ள உதவி பாஸ்டர்கள் 800 பேர் தினமும் மூன்று மணி நேரம் ஜெபிப்பார்களாம். தலைமை போதகரான பால்யாங்கி சோ அவர்கள் தினமும் ஏழு மணி நேரம் ஜெபிப்பார்களாம். இந்த காரியம் என்னுடைய ஜெப வாழ்க்கையில் ஒரு எழுப்புதலை கொண்டு வந்தது. அந்த நாளிலிருந்து என்னுடைய ஜெப வாழ்க்கை மாறியது. ஒரு விண்ணப்பத்தின் ஆவி ஊற்றப்பட்டது. அதே காரியத்தை பீல் மக்கள், விசுவாசிகளுக்கும் அறிவித்து ஜெபித்தபோது, ஷாலோம் சபைகளிலும், படிப்பறிவில்லாத ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள், வாலிபர்கள் எல்லார் மேலும் ஒரு ஜெப விண்ணப்பத்தின் ஆவி ஊற்றப்பட்டது. வெகு விரைவில் சபை வளர்ச்சியை கண்டோம்.

இப்பொழுதும், ஜெபத்தைக் குறித்து 4 காரியங்களை தியானிப்போம். தனி ஜெபம், குடும்ப ஜெபம், நண்பர்கள் ஜெபம், சபையார் ஜெபம். ஜெபம் ஜெயத்தை கொண்டு வரும். எழுப்புதலை கொண்டு வரும்.

**தனி ஜெபம்**

இயேசுவை அறிந்த நாம் யாவருக்கும் தனி ஜெபம் அவசியம், அதிகாலையிலே எழும்பி தேவனுடைய சமுகத்தில் தனியாக அமர்ந்திருந்து உறவாட வேண்டும். தனிப்பட்ட முறையில் நமக்கும் தேவனுக்கும் ஒரு சம்பந்தம் வேண்டும். தனிப்பட்ட முறையிலான உறவு இல்லையென்றால், நாம் கிறிஸ்துவை உடையவர்களாக இருக்க முடியாது. தனி ஜெபம் தனிப்பட்ட மனிதர்களுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறது. உதாரணமாக, ஆதி 32:24–ல் பாருங்கள் யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான். அப்பொழுது தேவன் அவனோடு உறவாடினார். ஆதி 32. 26–29 வசனத்தில் யாக்கோபு, நீர் என்னை ஆசீர்வாதித்தாலொழிய உம்மை போகவிடேன் என்று கூறி, தேவனோடு தனியாக போராடி ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டான். ஆம் பிரியமானவர்களே, ஆசீர்வாதம் என்றால் எல்லோருக்கும் ஆசை தான். ஆனால் தனியாக ஜெபிக்க வேண்டுமென்றால் நேரம் இல்லை என்பார்கள். தனி ஜெபம் தான் மனிதனுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறது.

அடுத்தபடியாக தனி ஜெபத்தில் தேவனுடைய வழிநடத்துதல் கிடைக்கும். ஆதி 24:7ம் வசனத்தில் ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் கொண்டுவரும்படிக்கு, தன்னுடைய ஊழியக்காரரான எலியேசரிடம் கூறுவதை பார்க்கிறோம். தேவன் தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் என்று கூறி, காரியத்தை எலியேசரிடம் ஒப்புக் கொடுப்பதை பாருங்கள். எப்படி தன்னுடைய ஒரே குமாரனுக்கு பெண் பார்க்கும் காரியத்தை தன்னுடைய ஊழியக்காரரின் கையில் ஒப்புக் கொடுக்க முடியும் என்று நினைத்தால் மிக ஆச்சரியமாக உள்ளது. ஆனாலும், உண்மை என்னவென்றால் எலியேசர் கர்த்தருக்கு பயந்தவன். கர்த்தரை முன்பாக நிறுத்தி ஜெபிப்பவன் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தான். ஆதி 24 : 11,12. இந்த காரியத்தை ஆபிரகாம் கூறின உடனே, எலியேசர் தனக்குள்ளே ஜெபிக்க ஆரம்பித்தான். என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவு செய்தருளும் என்று தனியாக ஜெபிக்கிறான். ஆதி 24:45–ல் இதை தன் இருதயத்தில் சொல்லி முடிக்குமுன்னே ரெபேக்காளை காண்கிறான். ஆதி24:48 ம் வசனத்தில் மறுபடியும் தலைகுனிந்து கர்த்தரை பணிந்து கொண்டு என்னை நேர்வழியாய் நடத்தி வந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

ஆம் பிரியமானவர்களே! தனி ஜெபம் நம்மை கர்த்தருடைய வழியில் நடத்தும், நேர் வழியில் நம்மை நடத்தி செல்லும். நம் வாழ்க்கையில் எந்த காரியமானாலும் நாம் தனியாக ஜெபிக்கும்போது கர்த்தரால் வழிநடத்தப்படுவோம்.

## குடும்ப ஜெபம்

"குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு" என்பது வழக்க சொல். அது உண்மை. குடும்ப ஜெபம் தான் குடும்பத்தைக் கட்டும். பாதுகாக்கும். இரட்சிக்கும்.

ஆதியாகமம் **6:9–**ல் நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். ஆதியாகமம் **6:18–**ல் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். நீயும் உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும் உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசியுங்கள். ஆதியாகமம் **7:1–**ல் இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன். பாருங்கள் தேவன் பூமியை அழிக்க இருந்த திட்டத்தில் அந்த நாட்களில் இந்த சந்ததியில் நோவாவின் முழு குடும்பம் பாதுகாக்கப்பட்டது. நோவா மட்டுமல்லாமல், அவன் குடும்பத்தாரும் கர்த்தரை குறித்த அறிவை பெற்றிருந்தார்கள். குடும்பமாய் விசுவாசித்திருந்தார்கள். எந்த பிள்ளையோ, மருமக்களோ, மனைவியோ எதிராகப் பேசவில்லை. காரணம் குடும்பமாக கர்த்தரை சேவித்தார்கள். நோவாவின் வார்த்தையை ஏற்றுக்கொண்டார்கள். ஆகையால் கர்த்தர் முழுக்குடும்பத்தையும் பாதுகாத்தார். இன்னும் கூட, உலகத்தில் என்ன நடந்தாலும், சுனாமியோ, பூமி அதிர்ச்சியோ, விஷக்காய்ச்சலோ, தீவிரவாதமோ, எந்த பயமோ வந்து நெருக்கினாலும் நீங்கள் குடும்பமாய் ஜெபித்து தேவனை தொழுது கொண்டால், உங்கள் குடும்பம் முழுவதும் பாதுகாக்கப்படும்.

அடுத்தப்படியாக யோபு **1:5–**ல் பார்க்கிறோம். யோபு தன் குடும்பத்திற்காகவும், பிள்ளைகளுக்காகவும், தகனபலிகளை செலுத்தியுள்ளான் என்பது தெரிகிறது. யோபு தன்னுடைய குமாரர் ஒரு வேளை பாவம் செய்து, தேவனை தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளை செலுத்துவான். இந்தப் பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்.

குடும்பமாக பிள்ளைகளுக்காக, யோபு மன்றாடினதை பாருங்கள். யோபு ஒரு நல்ல தகப்பன். யோபுவை குறித்து கர்த்தரே சாட்சி கொடுக்கிறார். கர்த்தர் பிசாசிடம் சவால்விடுகிறார். என் தாசன் யோபு, உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன், அவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.

யோபு தன் குடும்பத்திற்காக, குடும்பமாக பலிகளை செலுத்தினவன். அவன் குடும்பத்தில் வந்த பெரிய சத்துருவின் போராட்டத்திலிருந்து அவன் வெற்றி பெற்று, இரட்டத்தனையான

ஆசீர்வாதத்தைப் பெற்றான். பிரியமான தேவ பிள்ளைகளே, இந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் கூட, பிசாசின் போராட்டம் என்றும், பில்லிசூனியம் என்றும் மிகவும் பயந்து நடுங்குகிறார்கள் ஏன்? குடும்பத்தில் தவறாமல் குடும்ப ஜெபம் ஏறெடுத்தால், பிசாசின் மேல் வெற்றியை மேற்கொண்ட யோபுவை போல நாமும் வெற்றி பெறலாமே.

அப் : 10:2–ல் கொர்நேலியு குடும்பத்தை பாருங்கள். அவன் தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் கூட தேவனுக்கு பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களை செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான்.

வீட்டாரனைவரோடும் கூட தேவனை நோக்கி ஜெபம்பண்ணி கொண்டிருந்தான். அவனுடைய ஜெபம், தருமங்கள் தேவசந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. ஆகையால் தேவன் தம்முடைய ஊழியக்காரரான பேதுருவை அனுப்பி அவர்களுடைய முழு குடும்பத்தையும் இரட்சித்தார், அபிஷேகித்தார், மட்டுமல்லாமல், (அப்: 10:24) கொர்நேலியுவின் உறவின் முறையாரையும், அவனுடைய விஷேசித்த சிநேகிதரையும் வரவழைத்து ஜெபித்தான். அந்த நாளிலே பேதுரு மூலமாக அனைவரும் இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஆகவே நாம் குடும்பமாக ஜெபிக்கும் போது நமது குடும்பம் இரட்சிக்கப்படுவது மட்டுமல்லாமல், நமது உறவினர்கள், சிநேகிதர்களும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வது நிச்சயம்.

**நண்பர்கள் ஜெபம்**

இயேசுவோடு கூட 12 சீஷர்கள் இருந்தாலும் கூட பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூன்று பேரும் நெருங்கிய நண்பர்களாக இயேசுவோடு இருந்தார்கள். லூக்–9:28, 29–ம் வசனத்தில் இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக்கொண்டு ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின் மேல் ஏறினார். அவர் ஜெபம் பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறிற்று. அவருடைய வஸ்திரம் வெண்மையாகி பிரகாசித்தது. நண்பர்கள் தேவனுடைய மகிமையின் பிரகாசத்தை கண்டார்கள். நாமும் நண்பர்களோடு இணைந்து ஜெபித்தால் தேவனுடைய மகிமையை காணலாம்.

தரிசனங்களை காணலாம். நம்முடைய முகமும் மாறி நாம் தேவசாயலை அடையலாம். சந்தோஷம் மகிழ்ச்சி உண்டாகும்.

அப் – 16:25–30 வசனங்களில் பவுலும், சீலாவும் நண்பர்கள். இணை ஊழியர்கள். இவர்கள் சேர்ந்து ஊழியம் செய்து வந்தார்கள். ஆனால் ஒருநாளில் அநேக அடிகள் பட்டு,

சிறைச்சாலையில் இருக்கும்போது கூட இரண்டு பேரும் ஜெபம்பண்ணி, தேவனை துதித்துப் பாடினார்கள். அப்பொழுது சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாய் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. என்ன ஆச்சரியம்! உபத்திரவ நேரத்திலும் இரண்டு நண்பர்கள் இணைந்து நடுராத்திரியிலே ஜெபிக்கும் போது அவர் தங்களுடைய கட்டுகளும், மற்றவர்களுடைய கட்டுகளும் தெறிபட்டன. மட்டுமல்லாமல் சிறைச்சாலை அதிகாரி குடும்பமும், அவனோடு கூட அனைவரும் இரட்சிப்பைப் பெற்று ஞானஸ்நானம் பெற்றார்கள்.

மட்டுமல்லாமல், அப் – 16:13–ல் பவுலும், தீமோத்தேயுவும் நல்ல நண்பர்கள். இவர்களும் ஓய்வுநாளில் பட்டணத்திற்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் இருந்து ஜெபம்பண்ணி வந்தார்கள் என்று தெரிகிறது. இவ்வாறு ஜெபித்ததினால் தான் ஐரோப்பா கண்டத்தின் முதல் விசுவாசியாக லீதியாள் என்ற பெண்ணை தேவன் தெரிந்து கொண்டார்.

மத் 18–19,20–ன்படி இரண்டுபேர் தாங்கள் வேண்டிகொள்ளப்போகிற எந்த காரியத்தை குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்.

மட்டுமல்லாமல், லேவி 26:8–ன் படி உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம்பேரைத் துரத்துவார்கள்; ஆகையால் நண்பர்களாய் சேர்ந்து, வீணான காரியங்களை குறித்து பேசி நேரத்தை வீணடிக்காதபடி, ஒருமனதோடு சேர்ந்து ஜெபித்து பெரிய காரியங்களை தேவனுக்காக செய்வோம்.

**சபையாக ஜெபம்**

சபையாராக விசுவாசிகளாக கூடி ஜெபிக்க வேண்டும். ஆதிகால திருச்சபையினர் எல்லாரும் ஒன்றுகூடி ஜெபித்தார்கள். அப் 4:30–32 வசனங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயம், ஒரே மனதுடையவர்களாய் ஜெபித்தார்கள். அப்பொழுது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தை தைரியமாய் சொன்னார்கள்.

சபையில் ஜெபிக்கும் போது, மூன்று காரியங்கள் நடந்ததை பார்க்கிறோம். இடம் அசைந்தது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள், தைரியமாய் தேவ வசனத்தை சொன்னார்கள். ஆம் பிரியமானவர்களே சபையார் ஜெபிக்கும் போது நிச்சயம் நமது இடம் அசைக்கப்படும். சுற்றியுள்ள புற இன மக்கள் அசைக்கப்படுவார்கள். மட்டுமல்லாமல், வசனத்தை மக்களுக்கு எடுத்து கூறும் தைரியத்தை பெறுவார்கள். சாட்சியாய் வாழ முடியும்.

அடுத்தபடியாக அப்–12:5–ல் பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். நடந்த காரியம் என்ன? சபையாருடைய ஜெபத்தை கேட்டு, தேவன் ஒரு தூதனை அனுப்பி தமது ஊழியரை விடுவித்தார். சபையானது போதகருக்காக, ஊழியர்களுக்காக, ஜெபிக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தர் கேட்டு தமது ஊழியர்களை பாதுகாப்பார்.

மட்டுமல்லாமல், 2 நாளா – 7:14–ல் என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தை கொடுப்பேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். ஆகையால் அவருடைய நாமம் தரிக்கப்பட்ட பிள்ளைகளான விசுவாசிகள் ஒன்றுகூடி ஜெபிக்கும் போது தேசத்திற்கு ஷேமம் உண்டாகும்.

கடைசியாக இயேசுவுடன் அவருடைய சீஷர்கள் மூன்றரை வருடம் ஊழியம் செய்யும் பொழுது அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்டார்கள். ஆனாலும் கூட, இயேசுவிடம் அற்புதம் அடையாளங்கள் எப்படி நடக்கிறது? எங்களுக்கு கற்றுத்தாரும் என்று கேட்காமல், நாங்கள் எப்படி ஜெபிக்க வேண்டும்? எங்களுக்கு கற்றுத்தாரும் என்றார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் இயேசுவிடம் கண்டகாரியம் அவர் எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டேயிருந்தார். ஜெபத்திற்கு பின்பு அற்புதம், அற்புதத்திற்கு பின்பும் தேவனை மகிமைப்படுத்தி ஜெபித்தார். ஆகையால் அவருடைய ஜெபம் தான், அவர் பிதாவோடு கொண்டுள்ள உறவுதான், அற்புத அடையாளங்களை கொண்டு வருகிறது என்பதை சீஷர்கள் நன்கு அறிந்து கொண்டார்கள். இந்நாட்களில், ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் கூட தங்கள் கைகளினால் அற்புத அடையாளங்கள் நடக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்கள். ஆனால் ஜெபத்திற்கோ அதிக நேரம் கொடுப்பதில்லை. பிரியமானவர்களே! தேவனுடைய சமூகத்தை எவ்வளவு நாடுகிறோமோ அவ்வளவுக்கதிகமாய் தேவன் நம் மூலமாய் மகிமைப்படுவார்!

இயேசு கெத்சமனேயில் கடைசியாக ஜெபிக்கும் போது தம்முடைய சீஷர்களை பார்த்து, நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடு கூட விழித்திருக்க கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார்

***ஜெபிப்போம்! ஜெயத்தை பெறுவோம்! தேசத்தை சுதந்தரிப்போம்!***

# பணித்தள சாட்சிகள்

**சகோ. சகன் கோமால் வாங்கட் (குஜராத்)**

ரமிளாபேன் என்ற சகோதரி 6 வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டார். மந்திரவாதிகளிடம் சென்றும் எந்த பலனுமில்லை. ஜெபித்தபோது விடுதலை கிடைத்தது.

**சகோ. தினேஷ் பமானியா பிப்பளியா (குஜராத்)**

முகேஷ்பாய் எனற சகோதரரின் மகனுக்கு கால்களில் பக்கவாதம் ஏற்பட்டு அதிக கஷ்டப்பட்டார். மந்திரங்கள் செய்தும், மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. சபைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. மங்கு பூரியா பாட்டன்பூரா (குஜராத்)**

பூரிபேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

எய்லுபேன் என்ற சகோதரிக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்ததது. அதிக நாட்களாக விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் ஒரு அழகான குழந்தையை தந்து ஆசீர்வதித்தார்.

**சகோ. மன்னுபாபோர் சான்சர் (குஜராத்)**

காந்தாபேன் என்ற சகோதரிக்கு கேன்சர் இருந்தது. விசுவாசத்தோடு ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. அணில்குமார் கனவா ஹிரோலா (குஜராத்)**

ஜெயஸ்பாய் என்ற சகோதரரின் 12 வயது மகனுக்கு தலையில் கட்டி இருந்தது. ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. ராஜேஷ் மாவி குல்துரா (குஜராத்)**

சுனியாபாய் என்ற சகோதரர் 7 வருடமாக பக்கவாதத்தால் கஷ்டப்பட்டார்கள். தேவனிடம் விசுவாசம் வைத்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. தேவிசிங் கோஹரி தாந்தல்புரா (மத்தியபிரதேசம்)**

ரேகா என்ற சகோதரிக்கு அசுத்த ஆவிப்பிடித்து 1 வருடமாக பேசமுடியாமல் போனது. கோயிலுக்கு கொண்டு சென்றும், மருத்துவமனைக்கு சென்றும் சரியாகவில்லை. சனிக்கிழமை அவர்கள் ஊரில் வைத்து நடைபெற்ற கூட்டத்தில் 2 முறை கலந்துகொண்டு ஜெபித்தபோது வாய்திறந்து பேச தேவன் கிருபை செய்தார். இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆராதனைக்கு வருகிறார்.

**சகோ. துபாலியா மேடா நாகர்பூரா (மத்தியபிரதேசம்)**

காளுபாய் என்ற சகோதரரை விஷ தேள் கடித்துவிட்டது. மந்திரவாதிகளிடம் சென்றும் எந்த பலனுமில்லை. இயேசுவை பற்றி கூறியபோது விசுவாசித்தார். ஜெபத்தில் விடுதலை கிடைத்தது.

**சகோ. அமர்சிங் வாசுனியா ஹத்தியாதலி (மத்தியபிரதேசம்)**

ஜெயா என்ற 45 வயது சகோதரிக்கு வயிற்றில் குழந்தை அளவுக்கு ஒரு கட்டி வளர்ந்து பயங்கரமான வலியை தந்தது. சபைக்கு வந்து ஜெபித்தபோது 2 நாட்களில் சரியாகிவிட்டது. இயேசுவை ஏற்றுக்கொண்டு சபைக்கு வருகிறார்கள்.

**சகோ. ஹரிச்சந்திர மெய்டா பாண்டா (மத்தியபிரதேசம்)**

மான்சிங்பாய் என்பவருடைய 5 வயது மகனுக்கு காக்கா வலிப்பு வியாதி ஏற்பட்டு கஷ்டப்பட்டான். ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்

**சகோ. ஹிம்ராஜ் பபேரியா காளாகூட்டா (மத்தியபிரதேசம்)**

ஜம்புபாய் என்ற சகோதரரின் மகன் பிறவியிலேயே ஊனமாக இருந்தான். ஞாயிறுதோறும் ஆராதனையில் அவனுக்காக ஜெபித்து வந்தோம். இப்போது கால் நேராகி கொண்டு வருகிறது. நடக்க முயற்சி செய்து மெல்ல நடக்கிறான்.

**சகோ. ஜாய்சிங் ஜாமேர் ஹத்வாலியா (மத்தியபிரதேசம்)**

மோகன்பாய் என்ற சகோதரர் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார். இவர்கள் கிராமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு இயேசுவை விசுவாசித்தார். இவர் மெதுவாக நடக்க ஆரம்பித்தார். ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டபோது பூரண விடுதலை பெற்றுக்கொண்டார்.

**சகோ. மோத்திலால் கனவா ஜூனாகவாசா (மத்தியபிரதேசம்)**

டித்தாபேன் என்ற சகோதரரின் கணவர் குடிகாரராக, சண்டைப்போடும் பழக்கமுடையவராக இருந்தார். சகோதரி பொருத்தனைபண்ணி ஜெபம் செய்தார். தேவன் ஜெபத்தை கேட்டு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை கொடுத்தார்.

**சகோ. துக்ரம் ரஞ்சா அலாவ் ஹத்வாலியா (மத்தியபிரதேசம்)**

சவ்லிபேன் என்ற சகோதரி ஊழியத்திற்கு விரோதமாக செயல்பட்டார். இந்த சகோதரி யாருக்கும் பயப்பட மாட்டார். இவள் பெற்றோர் அதிக காய்ச்சலினால் கஷ்டப்பட்டனர். நான் போய் ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார். இதை பார்த்த இவளும் இயேசுவை உண்மையான தேவன் என்று விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்.

**சகோ. ரமேஷ் ஜெட்டுசிங் மகனியா ஹசல்வாட் (மத்தியபிரதேசம்)**

ரமிக்காபேன் என்ற சகோதரிக்கு குஷ்டரோகம் நோய் வந்து பரவ ஆரம்பித்தது. ஆலயத்திற்கு கொண்டு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. துல்ஜி கராசியா ஹிண்டிபாடா (இராஜஸ்தான்)**

பூர்சிங்பாய் எனற் சகோதரரின் காது கேட்காமல் இருந்தது. ஜெபத்தின் மூலம் காது கேட்க தேவன் கிருபை செய்தார்.

**சகோ. தித்தா டாமோர் லங்காய் (இராஜஸ்தான்)**

காளுபாய் என்ற சகோதரர் டிராக்டர் ஓட்டி கொண்டிருக்கும்போது திடீரென்று கீழே விழுந்துவிட்டார். எந்த வித அடிகள் இன்றி தேவன் பாதுகாத்துக்கொண்டார்.

**சகோ.கிடியா மச்சார் டாண்டிசோட்டி (இராஜஸ்தான்)**

தீத்துபேன் என்ற சகோதரிக்கு அதிகமாக இரத்தப்போக்கு ஏற்பட்டு கஷ்டப்பட்டார். ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ.மகன்லால் சர்போட்டா சோபாவதி (இராஜஸ்தான்)**

முன்னாபாய் என்ற சகோதரர் கை மற்றும் கால்களில் உள்ள நரம்புகள் இழுத்துக்கொண்டது. ரூ. 10,000 செலவு செய்தும் எந்த பலனுமில்லை. ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. கோம்சிங் கராசியா ரோகனியா மேகா (இராஜஸ்தான்)**

ஹக்ருபாய் எனற் சகோதரருக்கு கேன்சர் இருந்தது. தேவனிடம் விசுவாசம்

வைத்து ஜெபத்தில் விடுதலை கிடைத்தது.

**சகோ. வில்ஜி கராசியா ஜீராகோட் (இராஜஸ்தான்)**

கிப்பு என்ற 12 வயது சிறுமிக்கு காட்டு மரத்தின் விதையை சாப்பிட்டதில் விஷம் ஏறிவிட்டது. இரவு வேளையில் ஜெபிக்க கொண்டுவந்தனர். ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

சேத்தன்பேன் என்ற சகோதரியை பாம்பு கடித்துவிட்டது. தாங்கமுடியாத தலைவலியினால் கஷ்டப்பட்டார். ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

**சகோ. வால்சிங் நினாமா சாகுவா (இராஜஸ்தான்)**

வாலுபாய் என்பவரின் குடும்பத்தில் சாத்தானின் தொல்லைகள் அதிகமாக இருந்தது. ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்.

## மார்ச் 15ம் தேதி பிறந்தநாள் காணும்

### சகோதரி **வஹிதா தேவதாஸ்**



***சகோதரி வஹிதா தேவதாஸ்*** அவர்கள் தாயின் கர்ப்பத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பாத்திரம். இவர் ***சகோ. தேவதாஸ்*** அவர்களுக்கு தேவன் தந்த பரம தரிசனப்பணியான பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரிப் பணியிலே ஒரு அப்போஸ்தலப் பணியை நிறைவேற்றுவதிலும், ஆயிரம், ஆயிரம் பீல் ஆதிவாசி குடும்பங்களுக்கும், சுமார் 500 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்கும் ஆவிக்குரிய தாயாக அன்பையும், அரவணைப்பையும், ஆலோசனைகளையும், தேவனுடைய வழிநடத்துதல்களையும், தேவனுடைய வல்லமையையும் அறிவித்து நடத்திச் செல்லுகிற ஒரு அன்பு சகோதரியாவார்.

தேவன் இந்நாட்களில் தம் தீர்க்கதரிசன அபிஷேகத்தை அளவில்லாமல் இவர்கள் மேல் ஊற்றியிருக்கிறார். மார்ச் 15ம் தேதி (15.03.1963) "*பிறந்த நாள்*" காணும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்களை அந்நாளில் ஜெபித்து ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறோம். 47 வருடங்கள் கர்த்தரின் நாமத்தின் மகிமைக்காக வாழ்ந்து வருகிறார்கள்.

சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களின் தொலைபேசி எண் : **09327445469**

***இந்நாட்களில் அவர்களுடைய சாட்சியை அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்....***

## அர்ப்பணித்தேன் என்னையே...

**சகோதரி. வஹிதா தேவதாஸ்**

நான் 15.03.1963 அன்று தூத்துக்குடியைச் சேர்ந்த திரு. அருள்ராஜ் – கிரேஸ் அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகளாகப் பிறந்தேன். நான் எனது பெற்றோருக்கு மிகவும் பிரியமான மகளாகவும், கிறிஸ்தவ பக்தி, ஒழுக்கங்களில் சரியாக நடத்தப்பட்டும் வளர்க்கப்பட்டேன். நான் சிறு வயதிலிருந்து இயேசு கிறிஸ்துவை அதிகமாய் நேசித்து வந்தேன்.

**1976**ஆம் ஆண்டு நாகர்கோவிலில் கொட்டாரம் என்ற இடத்தில் நடைபெற்ற வாலிப பெண்கள் முகாமில் தேவன் என்னோடு **"கர்த்தர் என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர், யாருக்கு பயப்படுவேன், கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?"** சங். 27:1 என்ற வசனத்தின் மூலம் பேசினார். அந்நேரமே என்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தேன்.

ஊழியம் செய்யவேண்டுமென்ற வாஞ்சையிருந்த பொழுதிலும் பெற்றோரின் விருப்பப்படியே கல்லூரி படிப்பிற்குச் சென்றேன். எனது சரீரத்தில் இழுப்பு வியாதியினால் கஷ்டப்படுவேன். இந்த வியாதியிலிருந்து விடுதலை கிடைத்தால் ஊழியத்திற்கு அனுப்புவேன் என்று என் தாயார் பொருத்தனையோடு ஜெபித்தார்கள். 2 நாட்கள் மருத்துவமனைக்குச் சென்றேன் எந்த பலனுமில்லை. காயல்பட்டிணத்தில் நடைபெற்ற சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் கூட்டத்தில் தேவன் எனக்கு அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். எனக்கு ஜீவனைக் கொடுத்த தேவனுக்காக வாழ என்னை அர்ப்பணம் செய்தேன்.

திடீரென்று என் தகப்பனார் வியாதிப்படுக்கையில் விழுந்தபடியால் நான் வேலைக்குப் போகும் சூழ்நிலை ஏற்பட்டது. அதே நேரத்தில் மிஷனெரியாக ஒரிஸா செல்லும்படியாக வாய்ப்பு கிடைத்தது. ஒருபக்கம் உலக வேலை மறு பக்கம் ஊழியம் எதை தெரிந்தெடுப்பது என்று தவித்தேன். எனது பெற்றோர் கண்ணீரோடு என்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார்கள். **1983–**ல் IMS மூலம் ஒரிஸா மாநிலத்தில் மல்க்கன்கிரி என்ற பணித்தளத்தில் மிஷனெரியாக 2 ஆண்டுகள் பணிபுரிந்தேன்.

நான் எதிர்காலத்திலும் தேவனுக்காக ஊழியம் செய்ய வேண்டும் என்று ஜெபித்து வந்தேன். தேவன் என் ஜெபத்தைக் கேட்டார். **1985**ஆம் ஆண்டு ஜூலை 8 ஆம் தேதி FMPB- ல் பீஹாரில் பணியாற்றிக் கொண்டிருந்த சகோ. தேவதாஸ் அவர்களோடு திருமணம் நடந்தது. பீல் ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்வதற்கு எங்கள் இருவரையும் தேவன் இணைத்து எங்களை அழைத்தவர் கடந்த 24 வருடங்கள் எங்கள் வாழ்க்கையிலும் பீல் மக்கள் ஊழியப் பாதையிலும் உண்மையுள்ளவராயிருக்கிறார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக...

# ஜெபக்குறிப்புகள்

### பீல் மக்கள்

- ✞ பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

### Sharing Love Mission

- ✞ ஷாலோம் மிஷனெரி பணி மூலமாக எழுப்பப்பட்டுள்ள 435 சுதேச ஊழியர்களுக்காகவும், அவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.
- ✞ 2010–ம் வருடத்தின் திட்டங்கள் நிறைவேற்றப்படும்படியாக ஜெபியுங்கள்.

### Shalom Diocese in India

- ✞ ஷாலோம் பேராயத்திற்காகவும், 77 மூத்த ஊழியர்களுக்காகவும், அந்த சபைகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.
- ✞ சபை மூப்பர்கள், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

### Shalom Charity Mission

- ✞ ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெறும் சமுதாய நலத்திட்டங்களுக்காக ஜெபியுங்கள்.
- ✞ நமது பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.
- ✞ நமது ஷாலோம் விடுதியில் படித்துவரும் ஆதிவாசி பிள்ளைகளுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

### அலுவலக ஊழியங்கள்

- ✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகத்தில் நடைபெறும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.
- ✞ அலுவலக ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தையும், சுகத்தையும் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

### ஊழியத் தேவைகள்

- ✞ இந்த மார்ச் மாதத்திற்கான தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும்படியாக ஜெபியுங்கள். மாதந்தோறும் ரூ.500/– கொடுக்கக்கூடிய 1000 கிராம ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

### உபவாச ஜெபம்

- ✞ நமது பணித்தளங்களில் நமது ஊழியர்கள், விசுவாசிகள், மூப்பர்கள் மற்றும் பெண்கள் பிப்ரவரி 23ம் தேதியிலிருந்து எப்ரல் 3 வரை 40 நாட்கள் சிறப்பு உபவாச ஜெபங்கள் முழு பீல் மக்களின் இரட்சிப்பிற்காக ஏறெடுக்கப்பட்டு வருகிறது. ஜெபத்திற்கு எதிராக செயல்படும் அந்தகார வல்லமைகள் நிர்மூலமாக ஜெபியுங்கள்.

### மருத்துவ முகாம்

- ✞ நமது பணித்தளங்களில் ஏப்ரல் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள மருத்துவ முகாம் மற்றும் ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்களுக்காகவும், மருத்துவர்கள் மற்றும் குழுவினரை தேவன் பயன்படுத்தும்படியாகவும் ஜெபியுங்கள்.

### பணித்தள பார்வை

- ✞ கோவையை சேர்ந்த Pr, ரெயின்ஹார்டு சந்திரசேகர், மற்றும் டெல்லியிலிருந்து Mizoram Christian Fellowship குழு சென்னையைச் சேர்ந்த ஜோசப் ஸ்டீபன் ஆகியோர் நமது பணித்தளங்களை பார்வையிட செல்கின்றனர். இவர்களுடன் தேவ பாதுகாவல் இருக்க ஜெபியுங்கள்.

## 2010ம் ஆண்டிற்குள்

# 100 கிராம ஆலயங்கள் எழுந்து கட்டுவோம் வாருங்கள்...



நமது பணித்தளத்தில் கட்டுமானப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு ஆலயம்

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியும் அவருடைய கிருபையினாலும் இதுவரை 435 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள் மூலமாக 625 கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் எழுப்பப்பட்டுள்ளது. இந்த கிராமங்களில் விசுவாசிகள் பெரும்பாலும் மரத்தடியிலும், சிறிய குடிசைகளிலும், திறந்த வெளிகளிலும், சிறிய பந்தல்களுக்கு அடியிலும் கூடி ஆராதித்து வருகிறார்கள். மழைக் காலத்திலும் வெயில் காலத்திலும் குறிப்பாக விசுவாசிகள் அதிகரித்து வரும் காலங்களிலும் தேவனை ஆராதிக்க சரியான இட வசதியில்லாமல் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு தேவை பெரிய கோபுரங்கள் உள்ள ஆலயங்கள் அல்ல. 40X20 சதுர அடி அளவில் எழுப்பப்பட்ட நான்கு சுவர்களுக்கு மேலாக பொருத்தப்பட்ட ஓடுகள் அமைந்த சிற்றாலயமே. இதுவரை தேவனுடைய கிருபையினால் கடந்த 18 வருடங்களில் 215 ஆலயங்கள் எழுப்புவதற்கு தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமை செலுத்துகிறோம்.



அஸ்திபாரம் போடப்பட்டுள்ள கொலானா கிராம ஆலயம்

இந்த ஆலயங்கள் கட்டுவதற்கு அநேக ஊழிய ஸ்தாபனங்கள் மூலமாகவும், சபைகள் மூலமாகவும், தனிப்பட்ட குடும்பங்கள் மூலமாகவும் தியாகத்துடன் கொடுக்கப்பட்ட காணிக்கையின் மூலம் கட்டப்பட்டுள்ளது. அநேக சபைகள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற தேவ பிள்ளைகள் தங்களுடைய பணி முதிர்வு தொகை மற்றும் சொந்த சேமிப்புகள் மூலமாகவும் தியாகத்துடன் கட்டிக் கொடுத்துள்ளார்கள். அவர்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

2010ம் ஆண்டில் 100 கிராம ஆலயங்கள் கட்ட வாய்ப்புகள் உண்டு. ஆலயங்கள் கட்டப்பட வேண்டிய 100 கிராமங்களின் பெயர்கள் 18 பக்கத்தில் வெளியிட்டுள்ளோம். 40x20 அளவில் சுமார் 150 பேர் கூடி ஆராதிக்கக்கூடிய ஆலயங்கள் கட்டுவதற்கு,

ஓட்டினால் கூரை அமைக்க ***ரூ. 60,000/-,***
அஸ்பெஸ்டாஸ் ஷீட்டில் கூரை அமைக்க ***ரூ. 1லட்சம்,***
கான்கிரீட் கூரை அமைக்க ***ரூ. 2 லட்சம்*** செலவாகின்றது.

1. உங்கள் குடுமபத்தின் சார்பிலோ, சபையின் சார்பிலோ, நீங்கள் செய்து வரும் ஊழியத்தின் மூலமாகவோ சபைகளைக் கட்டிக் கொடுக்கலாம்.
2. நீங்கள் தொழில் செய்பவராயிருந்தால் வருடத்திற்கு 1 கிராம ஆலயம் கட்டித் தர முன் வரலாம்.
3. உங்களுக்காக வீடு கட்டும்பொழுதும், வீட்டில் திருமண காரியங்கள் நடைபெறும் போதும் தேவன் உங்களை அதிகமான பணம் தந்து ஆசீர்வதிக்கும் வேளையிலும் பொருத்தனையாக தேவனுக்கு மகிமையுண்டாக கிராம ஆலயங்கள் கட்டித் தரலாம்.

**“நீங்கள்..... ஆலயத்தைக் கட்டுங்கள், அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.” ஆகாய் 1:8.**

# கடந்த ஆண்டில் (2009) இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் மூலமாக கட்டப்பட்டுள்ள 10 ஷாலோம் கிராம ஆலயங்களில் ஒரு சில...



அந்தர்வேலியா, மத்தியப்பிரதேசம்



தேத்லா, மத்தியப்பிரதேசம்



ஹைஜாமால், இராஜஸ்தான்



பேடவ், இராஜஸ்தான்



சிக்லி, குஜராத்



சிமளியா, குஜராத்



வரம்கேடா, குஜராத்



பாண்டிகேடி, குஜராத்

## கடந்த ஆண்டில் (2009) நமது ஷாலோம் பணித்தளத்தில் கட்டப்பட்டுள்ள ஷாலோம் கிராம ஆலயங்களில் ஒரு சில...


சஜேலி, மத்தியப்பிரதேசம்


ஜாம்புகேடா, மத்தியப்பிரதேசம்


ஜாராதாபர், மத்தியப்பிரதேசம்


ஜுனாகவாஸா, மத்தியப்பிரதேசம்


அந்தேஸ்வர், இராஜஸ்தான்


புசியாவட், இராஜஸ்தான்


பிப்லாய், இராஜஸ்தான்



கங்கேலா, குஜராத்

## இந்த ஆண்டில் (2010) ஆலயங்கள் கட்டப்பட வேண்டிய
# 100 கிராமங்கள்

| No. | Village | Sevak |
|---|---|---|
| | **Gujarath** | |
| 1 | Bhavka-II | Mr.Baga Kattara |
| 2 | Jeshavada | Mr.Bhavsingh Kattara |
| 3 | Hadmatkuta | Mr.Chandu Damor |
| 4 | Kalimahudi | Mr.Dinesh Ninama |
| 5 | Burakuva | Mr.Gorsingh Damor |
| 6 | Pravelva | Mr.Havsingh Sangada |
| 7 | Undar | Mr.Kalsingh Gundiya |
| 8 | Retia | Mr.Kalu Sangada |
| 9 | Karamba | Mr.Khuman Damor |
| 10 | Nandela | Mr.Magalsingh Vasuniya |
| 11 | Nelsur | Mr.Mannu Meida |
| 12 | Golana | Mr.Masur Ganava |
| 13 | Limbakheli | Mr. Ramsingh Damor |
| 14 | Bordi | Mr.Nannu Bhuriya |
| 15 | Resumpura | Mr.Ramu Hathila |
| 16 | Khapriya | Mr.Ranniya Bhabhor |
| 17 | Vandriya | Mr.Ratan Mavi |
| 18 | Karwani | Mr.Savsingh Damor |
| 19 | Sankarpura | Mr.Surmal M. Damor |
| 20 | Gundikheda | Mr.Visiya Mavi |
| 21 | Chapari | Mr.Wilson Sangada |
| | **M.P.** | |
| 22 | Balvath | Mr. Amarsingh Kathija |
| 23 | Kalkandivi | Mr.Amarsingh Vasunia |
| 24 | Sajeli | Mr.Bura Kattara |
| 25 | Thanthalpura | Mr.Devisingh Gohari |
| 26 | Nangankhedi | Mr.Ditha Damor |
| 27 | Alirajpur (Sejgad) | Mr.Hathesingh Thomar |
| 28 | Sajeli (Karafalia) | Mr.Hukia Damor |
| 29 | Athersamba | Mr.Indarsingh Jamara |
| 30 | Japodhara | Mr.Jeyash Bhabhor |
| 31 | Pitol | Mr.Jorsingh Bhuriya |
| 32 | Udaipura (Rebuilt) | Mr.Kalsingh Bhuriya |
| 33 | Nagari-2 | Mr.Kanna Ninama |
| 34 | Piplipada | Mr.Kannusingh Bhuriya |
| 35 | Khjarpada | Mr.Karkiya Damor |
| 36 | Demara | Mr.Makansingh Bhuriya |
| 37 | Suliya | Mr.Mansigh Sehaia |
| 38 | Kashaldhari | Mr.Mathur Bhuriya |
| 39 | Rampuri | Mr.Mathur Bhuriya |
| 40 | Devigad | Mr.Nahatia Singada |
| 41 | Delwani | Mr.Nansingh Chowhan |
| 42 | Antherivad | Mr.Navalsingh Kharadi |
| 43 | Mundat | Mr.Paul Munia |
| 44 | Devka | Mr.Rakesh Bedi |
| 45 | Khedi - 3 | Mr.Ramesh Bhuriya |
| 46 | Bandisera | Mr.Ramesh K Damor |
| 47 | Gopalpura | Mr.Ramu R. Damor |
| 48 | Navapadi | Mr.Sankarsingh Sangada |
| 49 | Kalaketh | Mr.Sardar Damor |
| 50 | Mandli | Mr.Sardar Damor |
| 51 | Batiabadi | Mr.Sardarsingh B. Damor |
| 52 | Kukshi (Savali) | Mr.Sigdar Jamrat |
| 53 | Rupakhda | Mr.Somla Bhuriya |
| 54 | Ththem Badi | Mr.Thersingh Damor |
| | **Rajasthan** | |
| 55 | Kaliya (Rebuilt) | Mr.Badha H. Kattara |
| 56 | Heja Mohaji | Mr.Dhuleshwar Garasia |
| 57 | Rohal | Mr.Eswarlal Dodiyar |
| 58 | Jerpada | Mr.Kannu Macwana |
| 59 | Sobavathi | Mr.Makanlal Charpota |
| 60 | Agoria | Mr. Anil Dodiyar |
| 61 | Valgoon | Mr. Anthru Baria |
| 62 | Roopji Koota | Mr. Babulal Machar |
| 63 | Goika | Mr. Badar Baria |
| 64 | Borkunda | Mr. Barthu Dindor |
| 65 | Navagam | Mr. Buralal Kattara |
| 66 | Bajar | Mr. Dhaneshvar |
| 67 | Survan | Mr. Dinesh Godha |
| 68 | Rola | Mr. Eswarlal |
| 69 | Tadavali | Mr. Jalam Dindor |
| 70 | Amjera | Mr. Jeyanthilal |
| 71 | Dhanpura | Mr. Jithmal Patel |
| 72 | Kharod (R.B) | Mr. Kalsingh Dindod |
| 73 | Visiyapura | Mr. Kalsingh Mavi |
| 74 | Raipura | Mr. Kamalesh Machar |
| 75 | Mona Dungar | Mr. Kamelesh J. Machar |
| 76 | Kachla | Mr. Kathu Charel |
| 77 | Timeda Chotta | Mr. Kattu Ninama |
| 78 | Sath | Mr. Lallu Jothi |
| 79 | Nal | Mr. Nanalal Damor |
| 80 | Ghata | Mr. Narji Dindor |
| 81 | Sagda | Mr. Pannalal Kattara |
| 82 | Dhanapuri | Mr. Prabhulal Bhabhor |
| 83 | Osara | Mr. Ramesh .P. Sur |
| 84 | Tummet | Mr. Ramesh Kattara |
| 85 | Kalinjira | Mr. Ramesh Ravath |
| 86 | Khedpur | Mr. Ramesh V. Ganava |
| 87 | Padla (Rebuilt) | Mr. Ratansingh |
| 88 | Kariya (Rebuilt) | Mr. Samsu V. Machar |
| 89 | Pulpari | Mr. Sankarlal T. Kattara |
| 90 | Robia | Mr. Shanthilal Aahari |
| 91 | Ghati Goda | Mr. Suklal Pargi |
| 92 | Kakanvani | Mr. Thavra Meida |
| 93 | Charakani (Meda Fala | Mr. Vajhing Meida |
| 94 | Jeerakot | Mr. Vilji Garasia |
| 95 | Kundaliya | Mr.Aunkarlal Vasunia |
| 96 | Rohanya | Mr.Dhula Garasia |
| 97 | Majiya | Mr.Moolchand |
| 98 | Koota Machen | Mr.Nathulal B. Damor |
| 99 | Kharia | Mr.Suklal Damor |
| 100 | Gadli | Mr.Sunil Ganava |

# தேவன் தந்த திருச்சபை

**(26.01.2010** அன்று C.S.I. கால்டுவெல் நினைவு ஆலயத்தின் புதிய ஆலய பிரதிஷ்டை நாளில் நமது பேராயர். Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்கள் அளித்த தேவ செய்தியின் சுருக்கம்)



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, இந்த நாளில் தேவன் நமக்கு அவரை ஆராதிக்கும்படியாக தந்த மாபெரும் திருச்சபைக்காக தேவனைத் துதிப்போம். இந்த நாளிலும் திருச்சபையை குறித்த காரியங்களை எபேசியருக்கு பவுல் அடியார் எழுதின காரியங்களை வைத்து தியானிப்போம்.

**1. ஆலயம் கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் சின்னம்**

**முதலாவதாக** திருச்சபையை நாம் காணும்போதெல்லாம் கிறிஸ்து இயேசுவின் அன்பை நாம் நினைவுகூற வேண்டும். சபையானது இயேசு கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் சின்னமாக விளங்குகிறது. ஆகவேதான் எபேசியர் 5 : 25–27 வரை வாசிக்கும்போது **அப்படியே கிறிஸ்துவும் சபையின் அன்புகூர்ந்து.....தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.**

தேவன் நமக்கு திருச்சபையை தருவதற்காக தம்முடைய ஒரேபேறான குமாரனை தந்தருளி இவ்வளவாக அன்புகூர்ந்தார். பிதாவின் அன்பு சபையில் குமாரன் மூலமாக வெளிப்பட்டது. குமாரனாகிய இயேசுவின் அன்பு கல்வாரியின் மூலமாக சபைக்கு வெளிப்படுகிறது. பிரியமானவர்களே சபையானது எந்த மனிதனுக்கோ, ஸ்தாபனத்திற்கோ, சபைபிரிவுகளுக்கோ சொந்தமானது அல்ல. அது தேவனுக்கு சொந்தமானது. அப் 20: 28–யை வாசித்து பாருங்கள். ‘‘தேவன் தம்முடைய சுய ரத்தத்தினாலே சம்பாதித்து கொண்ட தமது சபை’’ என்று ஆவியானவர் வெளிப்படுத்துகிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு நம் தேசத்தில் ஷாஜகான் என்ற மன்னர் ஆட்சி புரிந்தது நமக்கு தெரியும். அவர் தம் மனைவி மும்தாஜை மிக அதிகமாக நேசித்தார். ஆனால் விரைவில் கொடிய நோயினால் அவருடைய அன்பு மனைவி தாக்கப்பட, எவ்வளவு பணம் செலவழித்து, மருத்துவ சிகிச்சை அளித்தும் பலனன்றி மரணப்படுக்கையில் விழுந்துவிட்டாள். உயிர் பிரியும் தருவாயில் மும்தாஜ் தன் அன்பு கணவர் ஷாஜகானிடம் தம் மரணத்திற்கு பின்பாக அவர் தம்மீது வைத்த அன்பை வெளிப்படுத்த, உலகம் அந்த அன்பை காண ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்ப வேண்டிக்கொண்டாள். ஷாஜகான் அரசனும் மன நிறைவோடு ஏற்றுக்கொண்டு தன் முழு பலத்துடன் அன்புச் சின்னமாக தாஜ் மஹாலைக் கட்டி எழுப்பினார். பல நூறு ஆண்டுகளாக இன்னும் உலகத்தின் பற்பல இடங்களிலிருந்து வரும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதைக் கண்டு ஷாஜகான் அரசன் தன் மனைவி மீது வைத்த அன்பு எவ்வளவு பெரியது என உலக அதிசயமாக கண்டு பூரிக்கிறார்கள். அன்பானவர்களே, இதைக்காட்டிலும் சொல்ல முடியாத, விவரிக்க முடியாக அன்பை தேவன் கிறிஸ்து மூலமாக வெளிப்படுத்தி சபையை நமக்குத் தந்துள்ளார். எனவே நாம் எப்பொழுதெல்லாம் ஆலயத்திற்கு உள்ளே வருகிறோமோ அப்பொழுதெல்லாம் இயேசு கிறிஸ்துவின் அன்பை நினைவு கூருவோம். ஆகவேதான் கிறிஸ்து இயேசு தான் மறுபடி திரும்பி வருமளவும் அப்பத்தையும், திராட்சைரசத்தையும் நீங்கள் புசித்து பானம்பண்ணும்போதெல்லாம் தமது மரணத்தை

நினைவுகூருங்கள் என்று கூறினார். திருச்சபை தேவனுடைய அன்பையும், கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் அன்பின் சின்னமாகும்.

**2. தேவ ஜனங்கள் பக்திவிருத்தி அடைவதற்காக தேவன் சபையை உருவாக்கினார்.**

அடுத்தபடியாக எபேசியர் 4 : 12–16 வரை வாசித்து பாருங்கள். குறிப்பாக 11,12 வசனங்களை பாருங்கள். **"நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்", (எபே. 4 :11, 12 )**

பக்தி விருத்தி அடைவது என்று கூறும்போது பரிசுத்தமான தேவனுடன் கூடிய உறவை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவுடன், கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலும் நாம் வளரவேண்டும். வேதத்தில் முதல் சபையை நாம் ஆதியாகமம் புத்தகத்தில் வாசிக்கிறோம். அதுதான் ஏதேன் தோட்டம். தான் சிருஷ்டித்த ஆதாம், ஏவாள் இரு விசுவாசிகளுடன் தேவனே வந்து உறவாடுகிறார். ஏதேன் தோட்டத்தில் தேவனின் உறவு சபையில் ஜனங்கள் பெறவேண்டும். சபையில் வரும் போதெல்லாம் ஜனங்களுடன் அவர் உறவாட விரும்புகிறார். பாடல்கள் பாடி ஆராதிக்கும் போது மகிமை தேவஜனங்களை மூடுகிறது. வேத வசனங்களை தியானிக்கும்போது ஆவிக்குரிய ஆகாரத்தை அவர் தந்து நம்மை போஷிக்கிறார். தேவாலயத்தில் வந்து ஜெபிக்கும்போது தேவன் ஜெபத்தைக் கேட்கிறார். நாம் ஏதோ ஞாயிற்றுக்கிழமை மட்டும் வந்து அமர்ந்து 2 மணி நேரத்தை செலவிட்டு போவதற்காக அல்ல. அவருடன் உறவாடி பக்திவிருத்தியில் வளருவதற்காக தான். தேவனுடன் பரலோகத்தில் நித்தியகாலமாக நேரத்தை செலவிட ஆயத்தமாக நினைக்கும் அன்பானவர்களே இந்த பூமியில் எவ்வளவு நேரத்தை அவருடன் செலவிட மனதாயிருக்கிறோம். சபையில் ஞாயிற்றுக்கிழமை மட்டுமல்ல. ஒவ்வொருநாளும் அவர் பாதபடியில் வந்து அவருடன் ஐக்கியம் கொள்வோம்.

மேலும் சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், பூரண வளர்ச்சி அடைவதற்காகவும் தேவன் ஐந்து வகையான ஊழியங்களையும் (எபேசி 4:12,13), ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒவ்வொரு விசுவாசியும் வளர பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், ஆவியின் ஒன்பது வரங்களையும் தந்துள்ளார். (கொரி12:4–10) கொரிந்து சபையில் பிரிவுகள், விபச்சாரம், விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை உண்ணுதல், திருமண காரியங்கள், கர்த்தருடைய பற்றிய அறிவில்லைமை, உயிர்த்தெழுதலை பற்றிய ஞானமில்லாமை இவைகள் மத்தியிலும் கொரிந்து சபை விசுவாசிகளை பார்த்து புவல் சொல்லுகிறார் : **"அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை."** (கொரி: 12:1) ஆகவே சபை கூடிவருவோம், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவோம். தேவனுடன் உறவாடுவோம்.

**3. சபையை தேவன் கட்டி எழுப்பி வருகியறார் (எபேசி 2:19–22)**

சபையைக் குறித்து ஆவிக்குரிய சத்தியத்தை ஆவியானவர் எபேசியர் நிருபத்தில் நமக்கு தந்துள்ளார். சபை ஒரு கட்டிடத்திற்கு உவமானமாக கூறப்படுகிறது. இயேசு கிறிஸ்துவே மூலைக்கல்லாகவும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் அஸ்திபாரங்களாகவும், நாம் அனைவரும் கூட்டிக் கட்டப்பட்டு வருபதை அழகாக விவரிக்கிறார். நாம் ஆராதிக்கும் இந்தக் கட்டிடம்

சபை ஜனங்கள் ஆராதிக்க தேவன் தந்த ஸ்தலமாகும், ஆனால் உலகமெங்கும் தேவன் தன் திருச்சபையான கட்டிடத்தை (Invisible Church) திருச்சபைகள் (Church) மூலாக ஆலயம் கட்டி எழுப்புகிறார். இது முடிவுற்ற பணியல்ல கிறிஸ்துவின் வருகை வரை நடைபெறும் கட்டப்படுகிற பணி.

தேவன் அஸ்திபாரங்களை வைத்த அப்போஸ்தலர்களை பாருங்கள். யோவான் அப்போஸ்தலர்களைத் தவிர கிட்டத்தட்ட அனைவருமே தங்களை இரத்தசாட்சிகளாக சபைக்காக தந்துள்ளார். ஆரம்ப நூற்றாண்டுகளில் மரித்த பரிசுத்தவான்கள் ஆயிரம் ஆயிரம். மட்டுமல்ல தேசங்கள் தோறும் தேவன் அனுப்பித்தந்த மிஷனெரிமார்களை நினைத்துப்பாருங்கள். அவர்கள் தேசத்திலும் குறிப்பாக தமிழ் நாட்டில் வந்து சபைக்கு அஸ்திபாரங்களாக தங்கள் ஜீவனையே ஊற்றின மிஷனெரிமார்கள் வில்லியம் கேரி, சீகன்பால்க், ராக்லண்டு, மர்காசியஸ், ரேனியஸ், ரிங்கள்தௌபே..... என நூற்றுக்கணக்கானோரை நினைக்கிறோம். அவர்கள் விட்டுச்சென்ற பணியை அதாவது சுவிசேஷ அறிவிப்பின் பணியை தொடர்ந்து செய்து, அஸ்திபாரமான அந்தப் பணியை நம் தேசத்தில் அறிவிக்கப்படாத இடங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

ஒவ்வொரு சபையும் சுவிசேஷ நற்பணியிலும், ஆத்தும ஆதாயப் பணியிலும் மிஷனெரிகளை தேசமெங்கும் அனுப்பும் பணியிலும் ஈடுபடவேண்டும். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி, அவர் தந்த தரிசனத்தின்படி தேவன் எங்கள் குடும்பத்தை அழைத்து 19 வருடங்களுக்கு முன்பு பீல் மக்கள் மத்தியில் கொண்டு சென்றார். சுவிசேஷத்தை அறிவித்து, சீஷர்களை உருவாக்கி, சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை தந்தார். இன்று 400–க்கும் அதிகமான சுதேச ஊழியர்களையும், 500–க்கும் அதிகமான சபைகளையும் பல்லாயிரகணக்கான விசுவாச குடும்பங்களையும் தேவன் தந்துள்ளார். சபை பாகுபாடின்றி இந்தப் பணிகளை தொடர்ந்து தாங்கிவருகிற சபைகளுக்காக தேவனைத் துதிக்கிறேன். தொடர்ந்து சபையாக மிஷனெரிகளை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை வரை ஜெபித்து, தாங்கி அவருடைய சபையைக் கட்டுவோம்.

## 4. ஆலயம் ஒரு ஜெபவீடு

எபேசியர் 3 : 20 & 21–ல் நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. சபை தேவனுடைய வீடு என்று வேதம் சொல்கிறது. அதை ஏசாயா 56:7 மற்றும் லூக்கா 19 : 46–ல் நாம் வாசிக்கலாம். ஞாயிற்றுக்கிழமை மட்டும் ஆராதித்து போவதற்கு அல்ல. அனுதினமும் சபை ஜெபவீடாக மாறவேண்டும். தேசத்திற்காக, சபைக்காக, மிஷனெரி பணிக்காக ஜெபிக்கும் ஸ்தலமாக மாறவேண்டும். மட்டுமல்ல சபையில் வந்து ஜெபிக்கும் தேவ ஜனங்களை தேவன் ஆசீர்வதிக்கிறார். அன்னாள் ஆலயத்தில் வந்து தன் இருதயத்தை ஊற்றியதால், தேவன் தீர்க்கதரிசியாகிய சாமுவேலை மகனாக தந்தார். புதிய ஏற்பாட்டில் 18 வருடங்கள் சாத்தானால் கட்டப்பட்ட கூனியான ஸ்திரியை ஆபிரகாமின் மகளாக இயேசு கண்டார். விடுதலை தந்தார். சபையில் வந்து நமக்காக நம் பிள்ளைகளுக்காக, தொழிலுக்காக, குடும்பத்திற்காக ஜெபிக்கும்போது தேவன் ஆசீர்வதிக்கிறார். நம் பெலவீனங்களை, துக்கங்களை நீக்கி நாம் நினைப்பதற்கும், வேண்டிக்கொள்ளுவதற்கும் மிக அதிகமாக அற்புதங்களையும், ஆசிர்வாதங்களையும் நமக்கு கட்டளையிடுவார். ஆலயத்தில்

நாம் கூடும்போது இயேசு பிரசன்னமாகி ஆசீர்வதிக்கிறார். இயேசுவுக்கே சபையில் மகிமையுண்டாவதாக.

கடைசியாக வெளி. 21 : 2&24 –ல் வரை வாசித்து பாருங்கள். சபையில் அன்புகூர்ந்த இயேசு மறுபடியும் வரப்போகிறார். இரண்டாம் வருகையில் என்ன நடக்கும்? மணவாட்டியான சபையை எடுத்துக்கொள்ள மணவாளனாகிய இயேசு வரப்போகிறார். கண்களால் காணும் தேவ ஆலயத்தை அல்ல. அவருடைய ஆலயமாயிருக்கிற இரட்சிக்கப்பட்ட நம்மை கூட்டிக்கொண்டு செல்வார். ஞானஸ்நான பட்டியல், திருமணப் பதிவேடு, மரணப் பதிவேடுகளில் நம் பெயர் எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் வேதம் தெளிவாக சொல்லுகிறது. ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். (வெளி 21 : 27) தேவன் தாமே நம்மை ஆயத்தப்படுத்துவாராக. நாமும் அவருடைய வருகையில் காணப்பட ஆயத்தமாவோம். நீங்களே தேவ ஆலயமாயிருக்கிறீர்கள். ஆமென். அல்லேலூயா.

## சாட்சி பகுதி....

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

எனது இரண்டாவது மகன் காபிரியேல், எனது வயிற்றில் ஆறுமாதமாக இருக்கும்போது டாக்டரிடம் பரிசோதனைக்காக சென்றபோது, ஸ்கேன் எடுத்துப் பார்க்கும்படியாக கூறினார்கள். ஸ்கேன் ரிப்போர்ட்டில் வயிற்றில் இருக்கும் தண்ணீரின் அளவு சாதாரணமாக இருக்கும் அளவினைவிட பாதிக்கும் குறைவாக இருப்பது தெரியவந்தது. இப்படி இருக்கும் பட்சத்தில் தாய் அல்லது குழந்தைக்கு டெலிவரியின்போது ஏதாவது குறை இருக்கும் என டாக்டர்கள் தெரிவித்தார்கள். மேலும் மற்றொரு இடத்தில் இன்னொரு ஸ்கேன் எடுக்கும்படி கூறினார்கள். இதற்கிடையில் நான் மிகவும் கவலையோடு சகோ. தேவதாஸ் அவர்களிடம் போனில் தொடர்பு கொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அவர்களும் எனக்காக பாரத்தோடு ஜெபித்தார்கள்.

ஒரே நாள் இரவில் கர்த்தர் அற்புதம் செய்தார். மறுநாள் நான் மற்றொரு இடத்தில் ஸ்கேன் எடுத்து அந்த ரிப்போர்ட்டை டாக்டரிடம் காட்டியபோது வயிற்றில் சாதாரணமாக இருக்கும் அளவினைவிட அதிக அளவில் தண்ணீர் இருப்பதாக கூறினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! அதன்பின் எட்டு மாத முடிவிலேயே வீட்டிலிருக்கும்போதே பனிக்குடம் உடைந்த காரணத்தினால் டாக்டரிடம் சென்றோம். டாக்டர் ஆப்ரேசன் செய்து குழந்தையை எடுத்தார்கள். டாக்டர் சந்தேகித்தது போல் குழந்தைக்கும் எனக்கும் எந்த வித பிரச்சனையும் குறையும் வராதபடி தேவன் பாதுகாத்துக் கொண்டார்.

அதன்பின்னர் எனது இரத்தத்தில் சுகர் இருப்பது தெரிய வந்தது. அதற்கான டாக்டரிடம் மருத்துவம் பார்த்தோம். மீண்டும் சகோ. தேவதாஸ் அவர்களிடம் போனில் தொடர்பு கொண்டு ஜெபிக்கும்படி வேண்டினேன். கர்த்தருடைய பெரிதான கிருபையால் அதன்பின் எடுத்த அனைத்து சுகர் ரிப்போர்ட்டிலும் சுகர் குறைந்து நார்மலுக்கு வந்தது. அற்புதம் செய்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்கள்!

**சோபியா பாஸ்கர்,** திருச்சி

# CBC (Children Bible Class - 2010)

ஒவ்வொரு ஆண்டும் நமது பணித்தளங்களில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கா CBC நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி கடந்த 2009ஆம் ஆண்டில் பணித்தளங்களில் **"விசுவாசமே ஜெயம்"** என்ற தலைப்பில் நாம் நடத்திய CBC (Children Bible Class) மூலமாக ஆதிவாசி சிறுவர்கள் சுமார் 20,000 பேர் பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் அன்பைப் பெற்றுக் கொண்டார்கள். அதேபோல் இந்த ஆண்டும் வருகின்ற மே மாதம் **"நல்ல போதகர் இயேசு"** என்கிற தலைப்பில் 20,000 சிறுவர்களுக்கு 520 Center- ல் CBC நடத்தலாம் என ஜெபித்துத் தீர்மானித்து செயல்பட்டு வருகிறோம்.

***இதற்கான தேவைகள்:-***

1. 520 ஆசிரியர்களுக்கான பயிற்சி கையேடுகள்
2. 20,000 CBC புத்தகங்கள்.
3. Badge.
4. பாட்டு புத்தகங்கள்
5. கலர் பென்சில்கள், பேனாக்கள்

**CBC** புத்தகங்கள் நேர்த்தியாக பிரிண்ட் செய்யவும், மற்ற பொருட்கள் வழங்கவும் ஒரு குழந்தைக்கு தலா ரூ. 10/– வீதம் 20,000 குழந்தைகளுக்கு ரூ. 2 இலட்சம் தேவைப்படுகிறது. இந்தத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். ***மேலும் இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்கள் உள்ளத்தில் ஆண்டவர் பேசினால் இந்தத் திட்டத்திற்காக உதவ முன் வாருங்கள்...***

தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!




**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்"** – *இயேசு. மாற்கு 10:14*

# ஷாலோம் பங்காளர் கூடுகை

மற்றும்

# ஷாலோம் சென்னை கிளை அலுவலக துவக்க விழா

நாள்
**07.03.2010, ஞாயிறு**

நேரம்
**மாலை 5.00 மணிக்கு**

இடம்
## ICSA PROGRAMME CENTRE
**No. 107, Pantheon Road, Egmore, Chennai - 8.**

சிறப்பு செய்தி
***Rt. Rev. Dr.V. தேவதாஸ்***





பணித்தள செய்தி :
***சகோதரி வஹிதா தேவதாஸ்***

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு*
*ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,*
*தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும்*
*அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு

**சகோ. எபனேசர் டேனியல்,** Cell : 9344474568

**சகோ. போஸ்,** Cell : 9042780315

# ஷாலோம்
# மிஷனெரி தரிசனக்கூடுகை

நாள்
**21.03.2010, ஞாயிறு**

நேரம்
**மாலை 5.00 மணிக்கு**

இடம்
**சிங்ளேர் நினைவு ஹால்,**
**C.S.I. ஆலய வளாகம், மார்த்தாண்டம்**

தலைமை : **A. வில்லியம் தாமஸ்** *M.A., B.D., M.Th.,*
சேகர போதகர், மார்த்தாண்டம்.
**மற்றும் தேவ ஊழியர்கள்**

சிறப்பு செய்தி

***Rt. Rev. Dr.V. தேவதாஸ்***



*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு*
*ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,*
*தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும்*
*அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு

**சகோ. செல்வதுரை, Cell : 94876-89869, சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405**
**சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

# ஜெபத்தைக் குறித்து பரிசுத்தவான்கள் கூறுவது...

**"நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" (அப் 6 : 4)**

**E.M.பவுண்ட்ஸ்:** நமது காலத்தில் தலைசிறந்த காலத்தையே ஜெபத்திற்குக் கொடுக்க வேண்டும். நம் வாழ்வின் மைய வேளையையும், தலைசிறந்த வலிமையையும் ஜெபத்தில் செலவிட வேண்டும்.

சிறந்த முறையில் ஜெபிப்பது சிறந்த தலைவர்களின் உண்மையான அடையாளமும், முத்திரையும் ஆகும். நீங்கள் எந்தளவிற்கு தேவமனிதன் அல்லது ஆவிக்குரிய தலைவன் என்பதை காட்டும் தெளிவான வெளிப்பாடு உன் ஜெபவாழ்க்கை.

**ஆஸ்வால்டு J. ஸ்மித்:** நாம் தேவனின் வல்லமையை அனுபவித்தாக வேண்டும். அதற்கு என்ன கிரயம் செலுத்த நேரிட்டாலும் கவலையில்லை. அவர் என்னை உடைத்து நொறுக்கி, ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகக் கதறச்செய்வாரானால் அது எவ்வளவு நன்றாயிருக்கும்.

**வெஸ்லி L டுயெல்:** ஒவ்வொரு தலைவனும் எல்லாவற்றையும்விட சிறப்பாக ஒரு ஜெபமனிதனாக இருக்க வேண்டும். அவனது உள்ளம் ஜெபம் என்னும் பள்ளியில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

மனிதர்களுக்காக தேவனிடம் பரிந்து பேசி மன்றாடுவது மிகச்சிறந்த காரியமாகும். தேவனுடைய பார்வையில் ஜெபவாழ்க்கையை விட அதிக முக்கியமானது வேறொன்றுமில்லை.

**ஜெனரல் வில்லியம் பூத்:** சிலரது ஆவல் பொன். சிலரது ஆவல் புகழ். சிலரது ஆவல் பாராட்டு. எனது ஆவலோ விலையேறப்பெற்ற ஆத்துமாக்களே.

ஆலயமணியோசை அருகே சிலர் தங்கியிருக்க விரும்புவர். நானோ நரக வாசலுக்கருகில் விடுதலைச் சாவடி அமைத்து ஜனங்களை மீட்பேன்.

**டாக்டர். பாப்பியர்ஸ்:** தேவனுடைய உள்ளத்தை உடைக்கும் காரியங்களால் உன் உள்ளம் உடைக்கப்படட்டும்.

**சகோதரி. கேத்தரின்:** கிறிஸ்துவின் பாடுகளை உணர்வதில் நான் மிகுந்த வேதனையை அனுபவித்த நேரம் பிறரது இரட்சிப்பிற்காக கெஞ்சி மன்றாடிய வேளையே.

**ஜான் வெஸ்லி:** கிருபாசனத்தில் போய் முட்டி மோதுங்கள்; மோதிக்கொண்டேயிருங்கள்; விடாமுயற்சியோடு மோதிக்கொண்டிருங்கள். தேவனுடைய கிருபையும், இரக்கமும் இறங்கி வரும்.

பாவத்திற்கேயன்றி வேறு எதற்கும் அஞ்சாத நூறு பிரசங்கிமாரை என்னிடம் கொண்டு வாருங்கள். அவர்களால் மட்டுமே பாதாளத்தின் வாசல்களை அசைக்க முடியும்; பரலோக இராஜ்யத்தை இப்பூலகில் நிலைநிறுத்த இயலும்.

**டாக்டர் மார்ட்டின்:** பல்லாயிரக்கணக்கானோர் கிறிஸ்துவை நோக்கி அசையும் அளவிற்கு நான் அவ்வளவுக்கதிகமாய் ஆழமாக தேவனால் அசைக்கப்பட்டிருந்தேன். முழு நாட்களை, முழு இரவுகளை தரையிலே முகங்குப்புற விழுந்து கிடந்திருக்கிறேன்.

**ரேவன் ஹில்:** நமது இயலாமையை ஒப்புக்கொள்வதே ஜெபம், ஜெபிக்கிறவன் தேவனை நம்புகிறான். ஜெபிக்காதவன் தன்னை நம்புகிறான். போதுமென்றிருக்கிறவன் ஜெபிப்பதில்லை.

திருப்தியடைந்திருக்கிறவன் ஜெபிக்கமாட்டான். சுயநீதிக்காரன் ஜெபிக்க முடியாது.

**ஸ்டூவெல்:** ஆவிக்குரிய தலைவன் தேவனுடைய சித்தத்தை அறிந்து ஜெபிப்பதே மிகச் சிறந்த ஜெபமாகும்.

**சர். தாமஸ் பக்ஸ்டன்:** உங்களுக்கு ஜெபத்தின் மதிப்பு தெரியும். அது விலையேறப்பெற்றது. அதை ஒருபோதும் புறக்கணிக்க வேண்டாம்.

**ஸ்பர்ஜன்:** ஒரு தலைவன் அல்லது பிரசங்கி அல்லது போதகன் மற்றெல்லாரையும் விட சிறப்பாக ஒரு ஜெபிக்கும் மனிதனாக இருக்க வேண்டும். ஆத்தும ஆதாயம் மற்றும் ஊழியத்தில் வெற்றி எனது முழங்கால் வேளையினால்.

ஜெபம் ஊழியத்தில் ஈடு இணையற்ற ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். அது தேவனிடமிருந்து வரும் அபிஷேகம். இதை ஜெபத்தின் மூலம் மட்டுமே பெற முடியும். ஆகவே நாம் உடனடியாக இடைவிடாமல், ஆர்வத்துடன் ஜெபிக்க வேண்டும். கிதியோனைப் போல்....மயிருள்ள தோலை ஜெபமாகிய களத்தில் போடுங்கள். அதை பரலோகத்தின் பனி இறங்கி வந்து நனைக்கட்டும்.

**ஃபின்னி:** ஜெபத்தின் ஆவி மட்டும் இல்லையென்றால் என்னால் ஒன்றுமே செய்துவிட முடியாது.

**எட்வர்ட் பேசன்:** ஊழியரின் முதலாவது அவசியத் தேவை ஜெபமாகும். இரண்டாவது தேவையும் ஜெபமாகும். மூன்றாவது தேவையும் ஜெபமாகும். ஆகவே என் அன்பானவர்களே, ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!! ஜெபியுங்கள்!!!

**ஹென்றி மார்ட்டின்:** தியானத்தில் குறைவு, சுருக்கமான ஜெபம் போன்றவற்றைக் கொண்டு பிரங்கத்தை ஆயத்தம் செய்தால் அது தேவனுக்குத் தூரமானது.

**ராபர்ட் மரே மச்செயின்:** அதிகாலையில் வேறு எவரையும் நான் காணும் முன்பு ஜெபித்தாக வேண்டும். அதிக நேரம் தூங்குவதால் தனித்து ஜெபிக்க தாமதமாகிறது. குடும்ப ஜெபம் வல்லமையிழந்தும், தேடி வருவோருக்கு உதவவும் முடிவதில்லை. குற்ற மனசாட்சி உறுத்துகிறது. ஆத்துமா ஆகாரமின்றி தவிக்கிறது. விளக்கு மங்கி எரிகிறது. அதோடு ஜெபிக்கச் சென்றாலோ, ஆத்துமா ஒருமித்து வருவதில்லை. இதற்கு பரிகாரம்? தேவனைத் தேடுவது தான். அதுவும் மற்றவர்களின் முகத்தில் விழிப்பதற்கு முன்பு அதிகாலையில்.

**ரிச்சர்ட் நியூட்டன்:** நான் ஜெபிக்க தவறியதால் என் வாழ்வில் நிர்விசாரமும், கனியற்ற தன்மையும் தோன்றுகிறது. ஜெபிப்பது ஆவிக்குரிய செயலின் முதன்மையான கடமை. உள்ளான காரியம் என்பது தெளிவான உண்மை. இதை உலகப்பிரகாரமான உள்ளம் ஏற்க மறுக்கிறது. ஆனால், என் வாழ்வில் ஜெபம், விசுவாசம், பொறுமை ஆகிய மூன்றும் ஒருபோதும் ஏமாற்றமளிப்பதில்லை. என் உள்ளத்தில் ஜெபிப்பதற்கான விடுதலையையும் நான் காணும்போது எல்லாக் காரியங்களையும் எளிதாகச் செய்ய முடிகிறது.

**டாக்டர் ஜட்சன்:** தினமும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் தனியாக ஜெபிப்பதிலும், தேவனுடன் உரையாடுவதிலும் செலவிடுங்கள். ஒருநாளில் ஏழு முறை உங்கள் அலுவல்களையும், நண்பர்களையும் விட்டு விலகி தேவனிடம் ஜெபத்தை ஏறெடுங்கள். நடு இரவில் இருட்டின் அமைதியான வேளையில் ஜெபியுங்கள். பொழுது விடியும் அதிகாலையிலும் செய்யுங்கள். தேவனுக்காகத் தியாகங்களைச் செய்யுங்கள். நமது காலம் குறுகியது.


**ஜான் வெல்ச்:** ஒருநாளில் எட்டு அல்லது பத்து மணி நேரம் ஜெபிக்காவிட்டால் நான் வீணாகப் போய்விட்டேன் என்றே நினைக்கிறேன்.

## போதகர்களாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள 77ஷாலோம் பீல் சுதேச ஊழியர்களுக்காக பாரத்துடன் ஜெபியுங்கள்.


| No. | Name | Field | No. | Name | Field |
|---|---|---|---|---|---|
| | **(Gujarath)** | | 39 | Himraj J.Baberia | Khedi 1 |
| 1 | Chatrasingh T.Bhuriya | Uchvaniya 1 | 40 | Mukesh H.Vasunia | Chokwada |
| 2 | Jorsingh L.Damor | Katlah | 41 | Gorsingh K.Meida | Gadwada |
| 3 | Rajesh G.Mavi | Gulthura | 42 | Kalu K.Gundiya | Nanganvat |
| 4 | Anil N.Ganava | Hirola | 43 | Somla M.Bhuriya | Rupakheda |
| 5 | Chandu R.Damor | Hadmath Koota | 44 | Rassia N.Damor | Jekot |
| 6 | Navalsingh V.Bilwal | Galaliavad | 45 | Badar D.Dodiyar | Bedevnath |
| 7 | Baga B.Kattara | Bhavka | 46 | Ramesh P.Vasunia | Chokwada-Thalaya |
| 8 | Jinu P.Mavi | Bandikhedi | 47 | Amarsingh M.Kathija | Runkheda 2 |
| 9 | Ramon C.Ratuva | Devhat | 48 | Kagada K.Ratuva | Chikkali |
| 10 | Gorsingh R.Damor | Burakuva | 49 | Mathur M.Bhuriya | Vijalpur |
| 11 | Kannu L.Bhabhor | Malvasi | 50 | Narsingh D.Baberia | Wavadi |
| 12 | Suresh P.Hathila | Dahod | 51 | Ramesh K.Damor | Thoraniya |
| 13 | Tharsingh R.Vagela | Munkosala | 52 | Jamsingh C.Damor | Vatta |
| 14 | Ramesh C.Meida | Rasarada | 53 | Valsingh M.Charel | Hagwani |
| 15 | Mangu K.Bhuriya | Battanpur | 54 | Ralusingh K.Hathila | Tikkidi |
| 16 | Wilson S.Sangada | Nagerela | 55 | Kanthilal L.Garasia | Baladi |
| 17 | Masur K.Ganava | Golana | 56 | Dhumsingh M.Baria | Navagam |
| 18 | Backulchandra K.Hada | Bhichawada | 57 | Kalsingh S.Bhuriya | Udhapura |
| 19 | Samson L.Damor | Vankol | | **(Raj)** | |
| 20 | Rathan S.Mavi | Kangela | 58 | Badar Baria | Goika |
| 21 | Ramu K.Hathila | Reesumbra | 59 | Kavji T.Kattara | Magardha |
| 22 | Havsingh N.Sangada | Pareva | 60 | Thaju T.Garasia | Gathediya |
| 23 | Thersingh G.Damor | Simaliya | 61 | Vikas Garasia | Garadia |
| 24 | Samji R.Meida | Jeri Khurd | 62 | Tharsingh H.Kattara | Padla |
| 25 | Khemchand Z.Mavi | Borkheda | 63 | Bhavji R.Garasia | Kunda |
| 26 | Ethersingh H.Damor | Dadgad Thalav | 64 | Rumiel D.Rana | Vakaner |
| | **(M.P)** | | 65 | Badhamilal Baria | Goda1 |
| 27 | Dilipsingh R.Vasunia | Jamukheda | 66 | Hirji J.Panda | Kasarwadi |
| 28 | Purson L.Bhuriya | Anthervelia | 67 | William Damor | Jeevakuta |
| 29 | Paul Munia | Kheidavad | 68 | Lalsingh T.Garasia | Kunda Bedal |
| 30 | Ramesh M.Vasunia | Padalva | 69 | Madiya M.Kadiya | Potelia |
| 31 | Jorsingh B.Bhuriya | Pitol | 70 | Pratapsingh M.Baria | Harendragad |
| 32 | Ramesh B.Bhuriya | Kakharadara | 71 | Suklal M.Damor | Kharia |
| 33 | Sardar J.Damor | Kalaketh | 72 | Kannaiyalal B.Munia | Muniakoota |
| 34 | Balusingh Baria | Methikheda | 73 | Hiralal H.Hattara | Padla (N.pada) |
| 35 | Khegu P.Vasunia | Hathiadhalli | 74 | Kidiya H.Machar | Tandi Chotty |
| 36 | Ransingh R.Bhabhor | Kheda | 75 | Ellam H.Dodiyar | Kottara |
| 37 | Kallu K.Dindod | Dhadka | 76 | Vajhing B.Munia | Munia Koota |
| 38 | Ramsu F.Bhuriya | Kachaldara | 77 | Bathia T.Garasia | Kumpura |

# T¦jR[j§tÏ AYNWUôLj úRûYIT Óm ETLWQeLs

- கூட்டங்கள் முகாம்கள் நடத்துவதற்கு ஆம்பிளிபயர், ஸ்பீக்கர், மைக், மிக்சர் (ரூ.1 லட்சம் மதிப்பில்)






- பணித்தள காரியங்களை வீடியோ எடுக்க, மற்றும் செய்திகளை வீடியோ எடுத்து கிராமங்களில் உள்ள நம்முடைய விசுவாசிகளுக்கு அனுப்ப நல்ல ஒரு வீடியோ கேமரா (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



- ஆடியோ ரெக்கார்டிங் ரூம் அமைக்கப்பட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)

- ஆடியோ ரெக்கார்டிங் –ற்கான உபகரணங்கள் – பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், மற்றும் செய்திகள் 1000 கிராம சபைகளுக்கு அனுப்பபட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



- 10 முக்கிய ஊழிய பொறுப்பாளர்களுக்கு 10 மோட்டார் சைக்கிள் தேவை (ரூ. 35,000 x 10)



- Training Unit & Communication Department க்கு 3 கம்ப்யூட்டர் தேவை (ரூ. 30,000 x 3)



- ஆராதனைகள் சிறப்பாக நடத்துவதற்கு Drum Set (ரூ.50,000) மற்றும் Pad (ரூ.30,000) தேவை



- மூன்று மாநிலங்களில் உள்ள பணித்தளங்களில் கூட்டங்களை நடத்துவதற்கு நல்ல 3 ஜெனரேட்டர்கள் தேவை. (ரூ. 40,000 x 3)



***தேவைகளுக்காக ஜெபியுங்கள் கர்த்தர் உங்கள் உள்ளங்களில் பேசினால் மேற்கண்டவற்றில் ஏதாவது வாங்க காணிக்கையாகவோ அல்லது மேற்கண்ட உபகரணங்களாகவோ வாங்கிக் கொடுக்கலாம். கர்த்தர்தாமே உங்கள் குடும்பத்தை, ஊழியங்களை, தொழிலை ஆசீர்வதிப்பாராக...***

## இணையதளத்தில் நமது
## அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர்




*பிரியமானவர்களே,*

நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் இந்த **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** இதழை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**web adress : http://www.shalommission.in/magazineview.asp**


## B e ¡X Tj§¬dûL **(English Magazine)**

பிரியமானவர்களே,




நீங்கள் அன்புடன் நேசித்து வரும் **"அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்"** பத்திரிக்கை தற்போது ஆங்கிலத்திலும் வெளிவருகின்றது. இதை **"Sharing Love Mission News Letter"** என்ற பெயரில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை வெளியிடுகின்றோம். உங்களுக்கு இந்த ஆங்கில பத்திரிக்கை தேவையெனில் எங்களுடன் தொடர்புகொண்டு தெரியப்படுத்த அன்புடன் கேட்கிறோம். அதன்பின் நாங்கள் உங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் இந்த இதழை உங்கள் முகவரிக்கு அனுப்புகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## *சந்தாவைப் பற்றி*



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காக அனுப்பப்படுகிறது.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2010) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/- ஆயுள் சந்தா : ரூ.600/-**

# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

## நாட்டு நடப்புச் செய்திகள்....

வரும் 2030ம் ஆண்டிற்குள் இந்தியாவில் சர்க்கரை நோயாளிகள் 8 கோடியாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. உலகில் சர்க்கரை நோய்க்கு ஆளாகும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதுவும் இந்தியாவில் சர்க்கரை நோயக்கு அதிகமானோர் ஆளாகிறார்கள். தற்போது 3 கோடியே 17 லட்சம் பேர் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஒரு புள்ளி விபரத்தில் தெரிய வந்துள்ளது. உலக ஜனத்தொகையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது இந்தியாவில் தான் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக உள்ளனர்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த குழந்தைப் புலிகள் அனைவருமே மே மாத்திற்குள் விடுவிக்கப்படுவர் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்பில் 18 வயதிற்கு குறைவான குழந்தைப் புலிகள் 510 பேர் கடந்த ஆண்டு மே மாதம் சரண் அடைந்துள்ளனர். ராணுவத்துடனான சண்டையில் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து சரணடைந்த குழந்தைப்புலிகளை கோர்ட் உத்தரவின்படி மறுவாழ்வு முகாமில் வைத்திருந்தார்கள்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்திரியை வணிக நோக்கில் பயிரிட தற்போது அனுமதி வழங்கப்படாது என மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த கத்திரியில் நடத்தப்பட்டுவரும் ஆய்வுகளின் முடிவுகள் வெளியாகும்வரை இந்தத் தடை நீடிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


### எங்களுடன் தொடர்பு கொள்ள

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

## தூத்துக்குடி - கால்டுவெல் காலனி
## கால்டுவெல் நினைவு ஆலய பிரதிஷ்டை விழாவில் (26.01.10)
## Rt. Rev. Dr. V. தேவதாஸ் & சகோதரி வஹிதா தேவதாஸ் – பங்கேற்பு



கால்டுவெல் நினைவு ஆலய முகப்பு தோற்றம்


தூத்துக்குடி – நாசரேத் திருமண்டல பேராயர்
Rt. Rev. Dr. J.A.D. ஜெபச்சந்திரன் அவர்களுடன்


தேசத்திற்கான சிறப்பு ஜெபம் ஏறெடுக்கும்
சகோதரி வஹிதா தேவதாஸ்


ஆலய பிரதிஷ்டை – தூத்துக்குடி – நாசரேத் திருமண்டல
பேராயர் Rt. Rev. Dr. J.A.D. ஜெபச்சந்திரன் அவர்கள்


செய்தி வேளையில் நமது ஷாலோம்
பேராயர் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள்


பேராயர் Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்களுக்கு அன்பளிப்பு


சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களுக்கு அன்பளிப்பு

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | சரிதா K. சர்போட்டா |
| தகப்பனார் பெயர் | : | கல்லா சர்போட்டா |
| தாயார் பெயர் | : | சம்பா சர்போட்டா |
| பிறந்த நாள் | : | 12.05.2002 |
| படிக்கும் வகுப்பு | : | IInd Std., |
| சொந்த ஊரின் பெயர் | : | பீபாடா |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

சரிதாவின் தந்தை இயேசுவை அறியாதவராக இருந்தார். இவர் இயேசு கிறிஸ்துவை அறிவதற்கு முன்பதாக மந்திரவாதிகளிடம் சென்று மந்திர கிரியைகளைச் செய்து வந்தவர். அந்த சமயத்தில் இவருடைய மனைவி கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டாள். மருத்துவமனைக்கு கொண்டு சென்றும் மந்திரவாதிகளிடம் கொண்டு சென்றும் நோய் குணமாகவில்லை. இறுதியாக இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு நமது ஷாலோம் சபைக்கு வந்தார்கள். நமது சுதேச ஊழியர் இந்த சகோதரிக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தைக் கண்ட இந்தக் குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து சபைக்கு செல்கின்றார்கள்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** நன்றாக ஜெபம் செய்வாள், நன்றாக படிப்பாள்.

**ஜெபியுங்கள்:-** இவள் நன்றாக படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், இவளுடைய குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் :** **Mr. R. Durairaj Samuel,** Chennai.

நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்து தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss